**கவனிக்க.**- 2018.05.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.**- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் காலி மாவட்ட நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2071 - 2018 මැයි මස 11 වැනි සිකුරාදා - 2018.05.11
2071 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 890 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 896 |

**கவனிக்க.**- 1990 சுவசெரிய மன்றம் சட்டமூலம் 2018, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மே மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

887-B 81280-5,403 (2018/05)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவி
விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல்கள் - திருத்தம் செய்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், கீழ்க் குறிப்பிடப்படும் இலக்கம் மற்றும் திகதியினை உடைய வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவி வெற்றிடங்களுக்கு உரிய அனைத்துப் பிரிவுகளுக்காக மாத்திரம், குறைந்த வயது எல்லையினை கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் திருத்தம் செய்கின்றேன்.*

| வர்த்தமானியின் இலக்கம் | வர்த்தமானியின் திகதி |
|---|---|
| 2064 | 2018.03.23 |
| 2065 | 2018.03.29 |
| 2066 | 2018.04.06 |

02. அதற்கிணங்க அவ் அறிவித்தலில் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிகளினை சேர்த்துக் கொள்ளும் குறைந்த வயதெல்லை " 40 வயது" என திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

03. இந்த அனைத்து வர்த்தமானி அறிவித்தல்களுக்காகவும் விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2018, யூன் மாதம் 11 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 25.

5-238

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாகப் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்
விண்ணப்பம் கோரும் அறிவித்தல் இரத்துச் செய்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.23 ஆந் திகதியதும் 2064 ஆம் இலக்கமும் கொண்ட வர்த்தமானியில் பகுதி I தொகுதி (IIஅ) பிரிவில் என்னால் பிரசுக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் (தமிழ்) பதிவாளர் பதவி தொடர்பான விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.*

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| திருகோணமலை | சேருவில | லிங்கபுரம் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் (தமிழ்) பதிவாளர் பதவி |

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்,

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 25.

5-239

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

போக்குவரத்து உத்தியோகத்தர் (திணைக்கள) பதவிகளுக்கு உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பம் கோருதல் – 2018

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் போக்குவரத்து உத்தியோகத்தர் (திணைக்கள) பதவியில் நிலவும் வெற்றிடம் (ஒன்றுக்கு) (01) தகைமையுள்ளவர் ஒருவரை தெரிவு செய்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018.06.11 ஆந் திகதி அல்லது அதற்குமுன்னர் "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு, இல. 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "போககுவரத்து உத்தியோகத்தர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2018.06.11 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதமொன்று அஞ்சலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்புவதற்கு தாமதிப்பதால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றல் வேண்டும்.

01. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை: எழுத்துமூல பரீட்சையொன்றின் பின்னர் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப திறமை முன்னுரிமை ஒழுங்கில் ஆட்சேர்க்கப்படும். நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒன்று (01) ஆகும்.

**02. இப்பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**:

- இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையது. மேலும், விதவைகள்/ அனாதைகள், தபுதாரர்/ அனாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.);
- இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுவர். அந்த மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர் ஒருவர் தெரிவுசெய்யப்படுமிடத்து ஒரு வருட பதில் கடமை காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவார்);
- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 7/2007 மற்றும் 01/2014 அதற்கு இடைதேர்வான சுற்றறிக்கைகளுக்கு அமைய, ஐந்து (05) வருடத்திற்குள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்;
- அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயாக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஆணைக்குழுவின் ஏனைய கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருப அறிவுத்துரைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டிருக்கும்.

**03. சம்பள அளவுத்திட்டம்**:

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்: ரூபா 30,840-10x350-11 x 370-10 x 560-10 x 660 - ரூபா 50,610 (சம்பள குறியீட்டு இலக்கம் - MT 3- 2016) இந்த சம்பள அளவுத்திட்டம் 2020.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். 2018.01.01 ஆந் திகதிக்கு அடிப்படைச் சம்பளம் ரூபா 24,468 மற்றும் ரூபா 3,429 ஒப்பீட்டுக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**04. தேவையான தகைமைகள்**:-

**கல்வி/தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம்**:

- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க. பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;
- கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் விஞ்ஞானத் துறையில் (பொது ஆங்கிலப் பரீட்சைத் தவிர்ந்த) சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்தோடு மூன்றாம் நிலைக் கல்வி பாடநெறியொன்றை தொடர்வதற்கான அடைவு மட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். பழைய பாடத் திட்டத்தின் பிரகாரம் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானது;

- பதவியின் பணிக்கடமைகளுக்கு ஏற்புடைய மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) ஆறு (06) மட்டத்திற்கு குறையாத தகுதியிலான பாடநெறியொன்றில் 24 மாதங்களுக்கு மேல் ஏற்புடைய தொழில்நுட்ப பாடநெறியொன்றை வெற்றிகரமாக தொடர்ந்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்;

- சகல விதமான மோட்டார் கார் மற்றும் லொறி ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் தேர்ச்சி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்; மற்றும்

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மோட்டார் தொழில்நுட்பவியலாளராக/ போக்குவரத்து உத்தியோகத்தராக ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். (அதில் 02 வருடங்கள் பரிசோதகராக/கட்டுப்பாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றி இருத்தல்).

***வயதெல்லை:*** 2018.06.11 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(தற்போது அரசாங்க/மாகாண, அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுகக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று).

***உடற் தகைமைகள்:-***

இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***வேறு தகைமைகள்:-***

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பதாரிகள் நல்லெழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்;
- சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- ஆண் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**05. ஆட்சேர்ப்பு முறை :**

5.1 ***எழுத்துமூலப் பரீட்சை:*** இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழு பணிப்பாளரின் கட்டளைக்கு அமைய தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும்.

| பாடங்கள் | உச்ச புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|
| மோட்டார் தொழில்நுட்ப அறிவு மற்றும் பராமரிப்பு பற்றிய அறிவு<br><br>- மோட்டார் தொழில்நுட்ப அறிவு<br>- வாகனப் பராமரிப்பு பற்றிய அறிவு<br>- மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் மற்றும் வீதி ஒழுங்குகள் பற்றிய அறிவு<br>- சாரதி அனுமதிப் பத்திரம், வருமானச் சான்றிதழ், காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் அவசர விபத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அறிவு<br>- கணினியுடன் தொடர்புடைய செயற்பாடுகள் | 100 | 40% |

5.2 ***பொதுவான நேர்முகப் பரீட்சை*** : தகைமைகள் உள்ளனவா என பரீட்சித்தல் மற்றும் உடற் தகைமைகளைப் பரிசோசித்தல்.

- ✔ நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கு அமைய எழுத்துமூலப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு அமைய மற்றும் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

06. விண்ணப்பப்படிவத்தை 22-29 செ. மீ. அமைய ஏ4 அளவிலான காகிதத்தில் 01 தொடக்கம் 07 வரையிலான தகவல்களை முதல் பக்கத்தில் அமையுமாறு விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தம்வசம் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவும். அத்தோடு பூரணப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதைக் கருத்திற்கொள்க.

***பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :-***

பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்த வினவப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

- கல்விச் சான்றிதழ்கள்;
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;
- தேசிய ஆளடையாள அட்டை;
- சகல வகைகளையும் சேர்ந்த மோட்டார் கார் மற்றும் லொறி ஓட்டுதல் பற்றிய தேர்ச்சிச் சான்றிதழ்;
- அனுபவம் பற்றிய சான்றிதழ் (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மோட்டார் தொழில்நுட்பவியலாளராக/ போக்குவரத்து உத்தியோகத்தராக பதவியில் ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். அதில் 02 வருடங்கள் பரிசோதகராக/கட்டுப்பாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றி இருத்தல்);
- நடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒன்று பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு கிராம அலுவரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்).

**கவனத்திற்கொள்க:**

(அ) விண்ணப்பத்தில் கல்வி மற்றும் தொழிற் தகைமைகளுக்கு ஏற்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(ஆ) ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது.

நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் தனது விண்ணப்பத்தை பணியாற்றும் திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் ரூபா 3,34,452 அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்கொள்ளல் வேண்டும்.

07. அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், சேவைப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் அவற்றுக்கு செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் என்பன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

08. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது ஒரு பகுதியை நிரப்புதல் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(சனாதிபதி சட்டத்தரணி) சரத் ஜயமான்ன,
பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
இல. 36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2018, ஏப்பிறல் 26.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு**

போக்குவரத்து உத்தியோகத்தர்(திணைக்கள) பதவி

01. முதலெழுத்துக்களுடன் பெயர்: (திரு./திருமதி/செல்வி) : ....................................................................
முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :...............................................................................................

02. முகவரி :
தனிப்பட்ட : ..........................................................................................................................................
..........................................................................................................................................
உத்தியோகபூர்வ :..........................................................................................................................................
..........................................................................................................................................
(அரசாங்க சேவையில் இருப்பின்)

03. பிறந்த திகதி:-
வருடம் :............ மாதம் :............. திகதி :............

2018.06.11 ஆந் திகதிக்கு வயது :-

வருடங்கள் :............ மாதங்கள் :............ நாட்கள் :............

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

5. தொலைபேசி இல. : கையடக்க: | | | | | | | | | | |
நிலையான: | | | | | | | | | | |

6. இனம் :........

7. பால்நிலை :........

8. கல்வித் தகைமைகள்:
க. பொ. த. (சா.தரம்)

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உயர் தரம்)

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

தொழில்நுட்ப கல்விப் பாடநெறி:-
நிறுவனம் :........
பயிற்சி சான்றிதழ்/டிப்ளோமா சான்றிதழ் பற்றிய விபரம் :........
சித்தியடைந்த வருடம் :........
NVQ மட்டம் :........

*தொழிற் தகைமைகள்:-*

2018.06.11 ஆந் திகதிக்கு தொழில் அனுபவம்:

வருடங்கள்:.............. மாதங்கள் :.............. நாட்கள்:.............

*வேறு தகைமைகள்:-*

1. ............
2. ............
3. ............

9. அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது பதவி விலகிய ஒருவரா என்பது பற்றி : .................

10. ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவரா? :............

பதில் ஆம் எனில், விபரங்களைத் தருக.: .................

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் எந்தவித நஷ்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:- ..........................

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .......................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் 2018 .......................... மாதம் .......................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................
கையொப்பம்,

பெயர் மற்றும் பதவிப் பெயர் ..........................
முகவரி: ..........................
பதவி முத்திரை: ..........................
திகதி: ..........................

**குறிப்பு** - தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களத் தலைவர் மூலம் அல்லது அவருக்கு பதிலாக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

விண்ணப்பதாரி அரசாங்க உத்தியோகத்தர் எனின்:-

திணைக்களத் தலைவரின் உறுதியுரை:

திரு./திருமதி/செல்வி .......................... தற்போது இந்த திணைக்களத்தில் கடமை புரிகின்றார் என்றும் அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இந்த திணைக்களத்தில் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

..........................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர்: ..........................
பதவி: ..........................
திணைக்களம்: ..........................
திகதி: ..........................

5 - 324

---

திருத்தம்

**விவசாய அமைச்சு**

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கனிஷ்ட தொழில் நுட்பம் அல்லாத சேவைகள் வகுதியின் ( PL 01- 2006A) கீழ் III ஆம் வகுப்பின் காவலாளி மற்றும் தொழிலாளி பதவிகளின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கோரல் - 2018**

2018.04.06 ஆந் திகதிய 2066 ஆம் இலக்கமுடைய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மேற்கூறப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பு அறிவித்தலின் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2018.05.25 ஆந் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

3. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை எனவும் அறியத் தருகின்றேன்.

டபிள்யு. எம். எம். பீ. வீரசேகர,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
இல. 42, சேர் மார்க்கஸ் பிரனாந்து மாவத்தை,
த. பெ. இலக்கம் 537,
கொழும்பு 07,
2018, மே 10.

5-621

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு**

*தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை*

மேற்குறிப்பிட்ட பரீட்சை தொடர்பாக 27.04.2018 ஆந் திகதி வர்த்தமானியில் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்பட்ட, 6.1 விடயத்தின் கீழ் (ஆ) (I) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகள் கீழ் உள்ளவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும்:-

6.1 **கல்வித்தகைமைகள்**

(ஆ)

(I) கல்விப்பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரண தரம்) இரண்டாவது மொழியாக மற்றைய அரசகரும மொழியில் (சிங்களம்/தமிழ்) சாதாரண சித்தியை பெற்றிருத்தல் அல்லது அதற்கு மேலதிகமான சித்தியைப் பெற்றிருத்தல்

எம். வை. எஸ். தேசப்பிரிய,
செயலாளர்,
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும
மொழிகள் அமைச்சு.

5- 316

---

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

*கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II இற்கு கணக்காய்வு பரீட்சகர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018*

கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பு 06(ii)(ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அச் சேவையின் II ஆம் தரத்திற்காக பொருத்தமான ஆட்களைத் தெரிவு செய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் ஒரு திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் இந்த அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பரீட்சைத் திகதி** .- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2018 செத்தெம்பர் மாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இந்த பரீட்சை நடாத்தப்படும். இந்த பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்து செய்வதற்கோ கணக்காய்வாளர் தலைமை அதிபதி அதிகாரங்களைக் கொண்டுள்ளார். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது.

01. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கையும் நியமனம் அமுலாகும் திகதியும்**.- நியமனம் அமுலாகும் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தீர்மானிக்கப்படும். குறித்த சில எண்ணிக்கையான வெற்றிடங்களையோ அல்லது சகல வெற்றிடங்களையுமோ நிரப்பாது விடுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரமுள்ளது.

02. **சேவை நிபந்தனைகள் :**

(i) அரசாங்க வர்த்தமானியின் பகுதி I இன் (II ஆ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1985 திசெம்பர் 20 ஆந் திகதிய 380/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் அந்த சேவைப்பிரமாணக் குறிப்பிற்கு செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள ஏதாவது திருத்தங்கள் என்பவற்றுக்கிணங்க தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவர்.

(ii) இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். 21/2017 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உங்களுக்கு உரித்தாகும் ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள்

அநாதைகள்/தபுதாரர் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிச்சயிக்கப்படுகின்ற விதத்தில் உங்களால் அதற்காக பங்களிப்புத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு தகுதிகாண் சேவைக்கு உட்பட்டு சேவையில் நியமிக்கப்படுவர்.

(iv) பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் அபேட்சகர்கள் அவர்களது தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுதல் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது:-

(அ) கடமைகள், வருகை மற்றும் நடத்தைகள் திருப்திகரமாக இருத்தல்;

(ஆ) தகுதிகாண் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல்.

(v) தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியின் பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு தவறுமிடத்து அவருடைய சேவை முடிவிற்குக் கொண்டுவரப்படும்.

(vi) பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஐந்து (05) ஆண்டுகளிற்குள் 2014, சனவரி 21 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய அரசகரும மொழியில் நிபுணத்துவத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(vii) தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றும் நிபந்தனைக்கு உட்படுவர்.

(viii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் காலத்திக்குக் காலம் வெளியிடப்படுகின்ற விதிகள் மற்றும் பிரமாணங்கள் அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்புரைகளிற்கும் இப்பதவி கடற்பாடுடையதாகும்.

03. **சம்பள அளவுத் திட்டம்** :- கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II தொடர்பான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் MN5-2016 குறியீட்டு இலக்கத்தின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 34,605 - 10 X 660 - 11 X755 - 15 X930 -ரூபா 63,460 ஆகும்.(ரூபா 36,585 இற்கு முன்னர் வினைத்திறமை காண்தடையுள்ளது) இருப்பினும், அச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் II ஆம் பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே உங்களுக்குச் சம்பளம் செலுத்தப்படும்.

04. **சுகாதாரமும் ஒழுக்கமும்** :- பரீட்சார்த்தி நல்ல உடலாரோக்கியமும் சிறந்த ஒழுக்க பண்பும் உடையவரென்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி திருப்தியடைதல் வேண்டும். பரீட்சார்த்தி நல்ல தேகாரோக்கியத்தினையும் சிறந்த கண் பார்வையினையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் தீவின் எந்த பாகத்திலும் சேவையாற்றுவதற்கான உடலியல் தகைமையினைக் கொண்டிருத்தலும் வேண்டும். தற்போதைக்கு அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் இல்லாத பரீட்சார்த்தி ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஒரு மருத்துவ பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும்.

05. **தகைமைகள்** :- எல்லா பரீட்சார்த்திகளும்,

(அ) இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) 2018 யூன் 13 ஆந் திகதியன்று அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரிகள் 22 வயதிற்கு குறையாதவராகவும் 32 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் 40 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். (அதற்கமைய 1996.06.13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1986.06.13 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியினைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர். அரசாங்க சேவையில் உள்ளவராயின் 1978.06.13 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியினைக் கொண்டிருப்பின் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

(இ) பரீட்சார்த்தி சிறந்த ஒழுக்கப் பண்பும் நல்ல உடலாரோக்கியமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக அல்லது இதற்கு ஒப்பான தகைமையை பெற்றிருத்தல்

அல்லது

(ii) இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் தராதரப்பத்திர ("லைசன்சியேட்") அல்லது இடைமட்ட ("இன்டமீடியட்") பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(iii) இலங்கை தொழில்நுட்ப கல்லூரி/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் உயர் தேசிய கணக்கியல் அல்லது வணிக டிப்ளோமாவில் சித்தி பெற்றிருத்தல்.

(உ) ஏதேனும் சமயப் பிரிவொன்றில் பதவியொன்றை வகிக்கும் எவரும் இப் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு** .-இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகர்கள் தங்களது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைச் சான்றிதழ்களையும் ஏனைய ஆவணங்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கோரப்படுகையில் சமர்ப்பிப்பதற்காக தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். பரீட்சையொன்றின் பெறுபேற்றை எதிர்பார்த்து விண்ணப்பிக்க முடியாது.

**குறிப்பு**.- ஒருவர் தகைமை கொண்டவர் எனக் கருதப்படுவது அவரால்,

(i) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையாக குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையை அல்லது பரீட்சைகளை 2018, யூன் 13 ஆந் திகதியில் சகல விதத்திலும் வெற்றிகரமாக பூரணப்படுத்தி இருத்தல்;

அத்துடன்

(ii) தகைமைகளுக்கான உத்தியோகபூர்வ சான்றிதழ்கள் அல்லது அச்சான்றிதழ்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ ஆவணமொன்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தால் மாத்திரமேயாகும்.

06. **பரீட்சைக் கட்டணம் :-**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இதற்கான கட்டணத்தை வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்கப்படும் வகையில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாட்டிலுள்ள எந்தவொரு தபால்/உப தபால் அலுவலகத்திற்குச் செலுத்தி உங்களது பெயருக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்பதனை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும். இப் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக் காரணத்திற்காவும் முழு அளவிலோ அல்லது பகுதியளவிலோ மீளச் செலுத்தப்படமாட்டாது. (பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருப்பது உகந்ததாகும்). அத்துடன், பரீட்சைக் கட்டணத்திற்காக முத்திரைகள் அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

07. **விண்ணப்பிக்கும் முறை :-**

(அ) விண்ணப்பம் இந்த அறிவுறுத்தலுடன் இணைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தின் படி தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ 4 அளவு தாளில் தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்தி தனது சொந்த கையெழுத்தினால் தெளிவாக நிரப்புதல் வேண்டும். 01 முதல் 04 வரையான தலைப்புகள் முதலாம் பக்கத்திலும் 05 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் 07 முதல் 09 வரை மூன்றாம் பக்கத்திலும் 10 முதல் 12 வரையான தலைப்புகள் நான்காம் பக்கத்திலும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவுறாத விண்ணப்பங்கள், பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் என்பதனால் விண்ணப்பத்தினை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக காணப்படுகின்றதா என்றும் அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கி விண்ணப்பப் படிவம் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதிலுள்ள விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பது குறித்தும் மீண்டும் கவனம் செலுத்துமாறு அறிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றையும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றையும் தன்வசம் வைத்திருத்தல் உகந்ததாகும்.

(ஆ) விண்ணப்பம் பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி பெற்ற மொழியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். (11 ஆம் பந்தியை பார்க்க) விண்ணப்பத்தினை தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2018, யூன் 13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பெறக்கூடிய வகையில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை

பரீட்சைகள் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்"கணக்காய்வுப் பரீட்சகர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018" என்று தெளிவான எழுத்தில் எழுதப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பத்தை தமது திணைக்கள தலைவவர்/ நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விடயத்திலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பங்கள் தொலைந்துபோனமை அல்லது தாமதமடைந்துவிட்டமை போன்ற முறைப்பாடுகள் எதுவும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. மேலும், பரீட்சார்த்தி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவது அதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமையாக அமையாது. இவ்வாறு அனுமதிக்கப்படுவது தற்காலிகமானதாகவும் பின்னர் அவசியமான பரிசோதனைகளுக்கு உட்பட்டதுமாகும்.

(உ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும், புதினத் தாள்களில் அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவித்தல் கொடுக்கப்படும். அறிவித்தல் வழங்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்புகையில் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டு என்பவற்றுடன் உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரினை சரியாகக் குறிப்பிட்டு விண்ணப்பதாரிகளால் விசாரணை செய்தல் வேண்டும். நீங்கள் கொழும்பிற்கு வெளியேயுள்ள பிரதேசத்தினை சேர்ந்தவராயின் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்காக உங்களது தொலைநகல் இலக்கம் மற்றும் மேற்படி விபரங்களைக் குறிப்பிட்டு தொலைநகல் மூலம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிப்பது பயனுள்ளதாகும்.

(ஊ) பரீட்சை விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை அனுமதி அட்டையில் கையொப்பத்தினை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் விண்ணப்பதாரரின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், (ஆண்டிற்கு ரூபா 240,360 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும்) அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், பௌத்த விகாரையொன்றின் பிரதம குரு அல்லது உயர் ஸ்தானத்தில் உள்ள குரு, ஏனைய வேறு மதத்தைச் சார்ந்த வணக்க ஸ்தலத்துக்குப் பொறுப்பாக இருக்கும் அல்லது அத்தகைய வணக்க ஸ்தலங்களில் முக்கிய பதவி வகிக்கும் குரு, முப்படைகளில் ஆணை பெற்ற அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியில் உள்ள அலுவலர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும்.

08. **பரீட்சைக்கு அனுமதி :-**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைத்தோருக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஒவ்வொருவரும் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தோற்றுகின்ற முதலாம் நாளன்றே தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையினை மண்டபத் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது.

(ஆ) சகல பரீட்சார்த்திகளாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளின் கோவையொன்று இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுதல், அவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேவையான தகைமைகள் உண்டென அல்லது பதவிக்கான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படுதல் கூடாது.

(ஈ) பரீட்சைகள் நடாத்தப்படுதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகளுடன் இணங்கி நடப்பதற்கு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுகின்றனர். இவ்விதிகளில் எவற்றையும் மீறுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுவார்.

09. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்** :-

பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) ஆட் பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

10. **பொய்யான தகவல்களை வழங்குதல்**:-

பரீட்சார்த்தி ஒருவர் தகமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்கு பின்னர் எந்தக் கட்டத்திலும் அவருடைய பரீட்சார்த்தத் தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுள்ளது.

11. **பரீட்சை முறை** :-

(அ) பரீட்சை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர், அவர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி ஒருவர், அவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளிலோ சித்தியடைந்திருப்பின் அவர் அப்பரீட்சையின் பெரும்பான்மையான பாடங்களில் எம் மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடம் ஒரு மொழியிலும், துணைப்பாடங்களை இன்னொரு மொழியிலும் சித்தியடைந்துள்ள சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்தை எம் மொழியில் சித்தயடைந்தாரோ அம் மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படமாட்டாது.

**குறிப்பு** : (i) மேலே (அ) மற்றும் (இ) யில் 'தகைமை பெற்ற' பரீட்சை என்ற சொற்றொடர் மேலே 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் ஒன்றாகும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

12. **பரிசோதிக்கும் முறை** :

(அ) பின்வரும் ஐந்து பாடங்களுக்காக நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும்:-

| விடயம் | | காலம் (மணித்தியாலம்) | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) கணக்கியல் | | 03 | 150 |
| (2) கிரயக் கணக்கியல் | | 02 | 100 |
| (3) கணக்காய்வு | | 03 | 150 |
| (4) வணிகக் கணிதமும் புள்ளிவிரவியலும் | | 02 | 100 |
| (5) சுற்றாடல் | 1 ஆம் பகுதி - பொருளியல் | 01 | 50 |
| | 2 ஆம் பகுதி - பொது வர்த்தக அறிவு | 01 | 50 |
| | 3 ஆம் பகுதி – வர்த்தகச் சட்டம் | 01 | 50 |

எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்னிணைப்பு "அ" இல் தரப்பட்டுள்ளது.

(ஆ) எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40 சதவீத புள்ளிகளையும் மொத்தப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 50 சதவீத சராசரி புள்ளியையும் பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத் தகுதி பெறுவதுடன் இப் பரீட்சைக்கு பின்னர் அறிவிக்கப்பட்ட ஒரு திகதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். பரீட்சார்த்திகளின் கல்வித் தகைமைகள், சான்றிதழ்கள் மற்றும் சேவைப் பதிவேடுகளைப் பரீட்சிப்பதற்கு மாத்திரமே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக் குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்படும்.

13. **நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் நடைமுறை :-**

எழுத்துப் பரீட்சையில் 05 வினாத்தாள்களுக்காகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவார்கள். பல பரீட்சார்த்திகள் ஒரே அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பின் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் எடுக்கப்படும்.

14. 12(ஆ) பந்தியின் பிரகாரம் தகைமைபெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்றுப் பட்டோலை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளிற்கும் பெறுபேறுகள் தபாலின் மூலம் அல்லது www.results.exams.gov.lkஎன்ற திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

15. மேற்படி பிரமாணங்களில் மேவப்படாத விடயங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவே இறுதி முடிவாகும்.

16. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளிற்கிடையே எவையேனும் இனக்கமின்மைகள் காணப்பட்டால் சிங்கள அறிவித்தலின் விடயங்களே மேலோங்கும்.

எச். எம். காமினி விஜயசிங்ஹ,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72,
பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.
2018, ஏப்பிறல் 22.

**பின்னிணைப்பு 'அ'**

**எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்**

(i) ***கணக்கியல்*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 03 மணித்தியாலயங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்)

* *கணக்கியல் கோட்பாடு.* – அடிப்படை எடுகோள்கள் மற்றும் தத்துவங்கள். சொத்து மதிப்பீட்டு முறைமைகள், இரட்டைப் பதிவுக் கோட்பாடு, கிரயத்தின் வகைகள், ஐந்தொகையின் தகவல்களை வகைப்படுத்தல் மற்றும் உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்குள் என்பன தொடர்பான பொதுவான அறிவு

* *கணக்கியல் நடைமுறை* .– ஒரு கணக்கீட்டு உரிமத்தில் பயன்படுத்தப்படும் வளங்களில் மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படையிலமைந்த கட்டுப்பாட்டு எண்ணக்கரு தொடர்பான அறிவு, நியமங்களுடன் ஒப்பிடுவதற்கான தேவை, வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் பகுப்பாய்வு, கொள்வனவு விற்பனை, பணத்தின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு, பதிவேட்டுப் பொருட் கட்டுப்பாடு முதலியவாறான அடிப்படை முகாமைத்துவ செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடைமுறைகளை நன்கு தெரிந்திருத்தல் மற்றும் நாளேடுகள், பேரேடுகள், கட்டுப்பாட்டுக் கணக்குகள் முதலியவற்றின் அறிக்கையிடல் வடிவமைப்புக்கள் தொடர்பான நிபுணத்துவம்.

* ஐந்தொகை, உற்பத்தி, வியாபார இலாப நட்டக் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், கட்டுப்பாட்டுக் கணக்குகள்,புள்ளிவிபர மற்றும் கணக்கீட்டு விகிதங்கள் என்பவற்றைத் தயாரிப்பது உட்பட கணக்கியல் நடைமுறைச் சிக்கல்கள்

(ii) ***கிரயக் கணக்கியல்*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 02 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்):-

* கிரயவியல்தத்துவங்கள், கிரயவியல் வகைகள், கொள்வனவு மற்றும் களஞ்சியநடைமுறை, பொருட்கள், பொருட்களை விலையிடல், பொருள்வழங்கலின் விலை குறித்தல், கூலிகள், மேந்தலைகள், நிலையான மற்றும் மாறும் செலவுகள், நேர் மற்றும் நேரில் செலவுகள், பாதீட்டுக் கட்டுப்பாடு, நியமக் கிரயவியல், முரண்கள், எல்லைக் கிரயவியல், ஒப்பந்தக் கிரயவியல்செயல்முறை கிரயவியல், துண்டு வேலைக் கிரயவியல், போக்குவரத்துக்கிரயவியல்,உற்பத்திக் கிரயவியல் என்பவற்றின் கொள்கைகள்.

(iii) ***கணக்காய்வு*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக 03 மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்):-

* *கணக்காய்வு எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும்.*- கணக்காய்விற்கான தேவை, கணக்காய்விற்கான அடிப்படையாக கணக்களிதகைமை, கணக்காய்வின் நோக்கெல்லை, கணக்காய்வுவகைகள், கணக்காய்வுக் காலம், கணக்காய்வாளர்களின் தகைமைகள், அதிகாரங்கள், கணக்காய்விற்கான அதிகாரம், முன்கணக்காய்வு, உள்ளகச் செவ்வை, உள்ளகக் கட்டுப்பாடு, ஆழமான கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு,நியமங்களிற்கான தேவை, கணக்காய்வுச் சான்றுகளின் வகைகள், கணக்காய்வு தொழில்நுட்ப முறைகள் என்பன

* *கணக்காய்வு முறைமைகளும் நடைமுறையும்.*- பிரதான ஐந்தொகை,உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்கு விடயங்கள், காணி,கட்டிடங்கள், நிலையான சொத்துக்கள், பதிவேட்டுப் பொருட்கள், நிதிசார் சொத்துக்கள், விற்பனைகள், கொள்வனவுகள், பெறுகைகள்,கொடுப்பனவுகள் முதலியவற்றை உள்ளடக்கிய கணக்காய்வுநிகழ்ச்சித் திட்டங்களைத் தெரிந்திருத்தல்.

* *கணக்காய்வுச் சிக்கல்கள்.*- அவதானிப்புத் திறைமையைப்பரீட்சிப்பதற்கான இலகுவான சிக்கல்கள், வழுக்களையும்,அசாதாரண நிலைமைகளையும் கண்டுபிடிக்கும் புத்தி சாதுரியம்

* கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணிகள்

(iv) ***வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும்.*** -வணிகக் கணிதமும்புள்ளிவிபரவியல் தொடர்பான 02 மணித்தியாலங்களிலான ஒருவினாத்தாள் (100 புள்ளிகள்)

*கணிதம் :*

* சமன்பாடுகள் - வரைப்படத் தீர்வுகள் உட்பட ஒருபடி மற்றும் இருபடிச் சமன் பாடுகள்

* தொடர்கள்- கூட்டல் விருத்தியும் பெருக்கல் விருத்தியும், கழிவிடுதல்உட்பட சாதாரண வட்டியும் கூட்டு வட்டியும்

* வரிசை மாற்ற ஒழுங்கமைவுகளும் சேர்வைகளும் உட்பட அடிப்படை நிகழ்தகவுக் கோட்பாடு, கணித மடக்கையினை பயன்படுத்தல்

*புள்ளிவிபரவியல் :*

* தரவுகளின் சேகரிப்பு, சமர்ப்பித்தல் மற்றும் பொருளுரைத்தல்

* அடுக்கு நிகழ்வுப் பகிர்வுகளின் பகுப்பாய்வு சராசரிகளும், மதிப்புச்சிதறலும், நியம வேறுபாடு, அடுக்கு நிகழ்வு வளைகோடுகள்.

* நிகழ்தகவு பகிர்வும் அதன் பிரயோகமும்

* மாதிரித் தெரிவும் மாதிரிப் பகிர்வீடுகளின் முக்கியத்துவமான கோட்பாடுகளும், நியம வழு, மாதிரித் தெரிவுமுறைகள்,முக்கியத்துவத்தை அறிவதற்கான பரீட்சைகள்.

* காலத் தொடர்கள் - காலத்தொடரொன்றின் உறுப்புக்கள்,போக்குகள் பருவ,சுழல் வட்ட மற்றும் ஒழுங்கற்ற முறைகள்

* குறிவரைத் தொடர்புகள், புள்ளி விபரக் குறிவரைவுஅட்டவணைகள்

(v) சுற்றாடல் - பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூன்றுமணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்)

பொருளியல் கோட்பாடுகள், சட்டம் மற்றும் பொது வர்த்தக அறிவு

*பொருளியல்:*

* பொருளியல் கற்கையின் தன்மை, முக்கியத்துவம்,விலைப்பொறிமுறை, கேள்வியும் நிரம்பலும், கிரயமும் வருவாயும்,இலாபத்தை உச்சப்படுத்தல், உற்பத்திக் காரணிகள், போட்டியும் தனியுரிமையும்

* இலங்கைப் பொருளாதாரத்தின் குணாம்சங்கள், தேசிய வருமானம்,மொத்த தேசிய உற்பத்தி,சென்மதி நிலுவை, பணவீக்கம்,பொருளாதார மந்தம், நிலையான மற்றும் மிதக்கும் செலாவணி வீதங்கள், மதிப்பிறக்கம் போன்ற பொருளியல் பிரச்சினைகள்

* பணமும் வங்கியியலும் - பணத்தின் தன்மை, பணத்தின்உருவாக்கமும் செயற்பாடுகளும், பணத்தின் பெறுமதி,பொது விலை மட்டம், இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், கடன் மற்றும் சேமிப்பு நிறுவனங்களின்பணிகள்

*சட்டம் :*

* இலங்கையில் உள்ள பலவித சட்டமுறைகளின் வரையறை பற்றிய வரலாற்றுச் சுருக்கக் குறிப்பும் அவை தொடர்புறும் விதமும், நீதிமன்றங்கள், தொழில் மன்றங்கள்,கைத்தொழில் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் கட்டமைப்பும் பணிகளும், இலங்கையில் நீதி பரிபாலனத்தில் ஈடுபட்டுள்ள நீதிபதிகளினதும் பிற முக்கிய சட்ட உத்தியோகத்தர்களினதும் பணிகள்.

* ஒப்பந்த இயல்புகள், இயற்கையான மற்றும் சட்ட ரீதியான ஆள்;முகவராண்மை,பிரதிநிதித்துவம், அதிகாரத்திற்கப்பாற்பட்ட சித்தார்த்தம்

*பொது வர்த்தக அறிவு :*

* முறைமைகள் நடைமுறைகள் உட்பட அலுவலக அமைப்புகோவைப்படுத்தலும், தொகுத்து அட்டவணைப்படுத்தலும்,அலுவலக சாதனங்கள், கூட்டங்களை ஒழுங்கு செய்தல், கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புக்கள், அறிக்கைகள் எழுதுதல்

* நிறுவனக் கட்டமைப்பு, அமைப்பு வரைபடம்,பதவியணியின் ஒவ்வொரு மட்டத்திற்கிடையுலுமான உறவு, ஒருமுகப்படுத்துதல், பன்முகப்படுத்துதல், தனிவியாபாரம், பங்குடமை, கூட்டு முயற்சிகள்,கம்பனி,கூட்டுறவுஅமைப்பு, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியன உட்பட வணிக அமைப்புக்கள்

* காப்புறுதிக் கோட்பாடுகளும் வகைகளும், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

* கடல், தரை, ஆகாய மார்க்கப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கான கப்பற் கேள்வு, தாமதக் கட்டணம்

* கைமாறத்தக்க ஆவணங்கள், கைமாறல் என்பதன் அர்த்தம்,காசோலைகள், நாணயமாற்று உண்டியல்கள், புறக் குறிப்புக்கள்,குறுக்குக் கோடிடல், ஏற்றுக்கொள்ளல்,மதிப்பிழத்தல்

* இலங்கையில் கூட்டுறவு அமைப்புக்களினால் நிறைவேற்றப்படும் பணிகள்

* முதலீட்டு கோட்பாடுகள், இலங்கையில் பங்குப் பரிவர்த்தனை

* விற்பனை ஒப்பந்தம், பொருட்களின் உரித்தினை ஒப்படைத்தல்,நிபந்தனைகளும் பற்றாணைகளும், வாடகைக் கொள்வனவு, தவணைக் கட்டணஅடிப்படையில் கொள்வனவு அடங்கலான பொருள் விற்பனை நடைமுறைகள், ஆவணங்கள், ஏற்றுமதி இறக்குமதி முறைகள்,கொடுப்பனவு முறைகளும் நியதிகளும், சுங்க மற்றும் உற்பத்தித் தீர்வைகள் என்பன உட்பட சர்வதேச வர்த்தகம்

* தேசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் பணிகள் உட்பட அபிவிருத்தி நிதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பரீட்சைச் சுட்டெண் |                |

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

**கணக்காய்வு பரீட்சகர் சேவையில் II ஆம் தரத்திற்கு கணக்காய்வு**

*பரீட்சகர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018*

**Open CompetitiveExamination for Recruitment of Audit Examiners to Grade II of the Audit Examiner's Service - 2018**

*(ஏ4 அளவிலான 02 கடதாசிகள், தலைப்பு இல. 01-04 வரை முதலாம் பக்கத்திலும்,05-06 வரை இரண்டாம் பக்கத்திலும்,07 முதல் 09 வரை மூன்றாம் பக்கத்திலும் மிகுதி நான்காம் பக்கத்திலுமாகத் தயாரிக்கவும்.)*

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமும் நகர இலக்கமும் — நகரம் [ ] நகர இல. [ ]

கொழும்பு - (Colombo) - 1
யாழ்ப்பாணம் - (Jaffna) - 2

(நகரத்தினை ஆங்கில பெரிய எழுத்துக்களிலும் நகர இலக்கத்தினையும் பெட்டிக்குள்ளும் இடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் [ ]
(குறித்த இலக்கத்தினை பெட்டிக்குள் இடுக)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது)

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..................................................................
(உதாரணம்: CHANDRASEKARA THAKSHILA SAMAN KUMARI )

1.2 இறுதிப் பெயரை ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களிலுள்ள முதலெழுத்துக்களை இறுதியிலும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..................................................................

(உதாரணம்: KUMARI, S.T.S)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்)..............................................................

02. முகவரி :

2.1 நிரந்தர முகவரி (அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டியது) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) .....................
.........................................................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்)...........................................................................

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)..................................................................

(அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை ஆகியவற்றிலுள்ள உத்தியோகத்தர்கள் அலுவலக முகவரியை வழங்க வேண்டும்.)

03. 3.1 பால் (பெண் - 1, ஆண் - 0): [ ]
(உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக)

3.2 தேசிய ஆளடையாள அட்டை இல. : [ | | | | | | | | | | | ]

3.3 விவாக நிலை (விவாகமானவர் - 2, விவாகமாகாதவர் - 1): [ ]

(உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக)

3.4 பிறந்த திகதி :-
ஆண்டு: [ | | | ] மாதம்: [ | ] திகதி: [ | ]

3.5 2018, யூன் 13 ஆந் திகதியில் வயது :-

வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

3.6 கைத்தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]

04. இனத் தொகுதி : [ ]
சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையோர் - 5

(உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக)

05. (i) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீங்கள் பெற்றுள்ள தகைமைகள் :

| பெறப்பட்ட தகைமை | தகைமைபெற்ற திகதி | பாடங்கள் | பெறுபேறுகள் வழங்கப்பட்ட திகதி | தகைமை பெறப்பட்ட நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) கல்விப் பொதுத் தராதரப் (சா. த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :

(அ) பரீட்சை ஆண்டு.................... (ஆ) பரீட்சை சுட்டெண்....................

| பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|
| | |

06. மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :----.

07. தமது நடத்தை மற்றும் இயலுமை பற்றிய சான்றுறுதிப்படுத்தக்கூடிய விண்ணப்பதாரியால் பெயரிடப்படும் இரண்டு நபர்களின் பெயர் மற்றும் முகவரி :

(i) ----.

(ii) ----.

08. அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இவற்றைப் பூர்த்தி செய்யவும் :

(i) நீங்கள் சார்ந்திருக்கும் சேவை/திணைக்களம், தரம் :----.

(ii) அச்சேவைக்கு/திணைக்களத் தரத்திற்கு நிரந்தமாக்கப்பட்ட திகதி :----.

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

09. பணப் பற்றுச்சீட்டை கழராதவாறு பெட்டிக்குள் ஒட்டவும்.

[ ]

(i) பற்றுச் சீட்டின் இலக்கம் :----.

(ii) பரீட்சைக் கட்டணம் செலுத்திய திகதி :----.

(iii) பரீட்சைக் கட்டணம் செலுத்திய நிலையம் :----.

(iv) செலுத்திய பணத்தொகை (ரூபா) :----.

(பணப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருப்பது பின்தொடர் நடவடிக்கைகளுக்கு அவசியமான தாகும்.)

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய நம்பிக்கைக்கும் அறிவிற்கும் எட்டியவரை உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணத்திற்கான கொடுப்பனவாக ..................... ஆந் திகதியிடப்பட்ட .............................. இலக்கங்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்துள்ளேன் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான்

தகுதியற்றவன் எனக் காணுமிடத்து இப்பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

---------------------------------------------
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :.................

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் 07 (ஊ) ஆம் பந்தியைப் பார்க்கவும்.) :-

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ...................................................................... எனும் பெயருடைய விண்ணப்பதாரியை நான் தனிப்பட்ட ரீதியாக அறிந்தவர் எனவும் அவர், 2018 ....................... எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

---------------------------------------------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்,
இறப்பர் முத்திரையும்.

உறுபடுத்துபவரின் முழுப்பெயர் : ...............................
பதவி : .................................
முகவரி : .....................................................
திகதி :.....................

12. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

(தற்போது அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்காக)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................... எனும் பெயருடைய விண்ணப்பதாரி.................................... ஆந் திகதி முதல் இவ் அலுவலகத்தில் வேலை செய்கின்றார் என்றும், அவருடைய வேலையும் வருகையும் நடத்தையும் திருப்திகரமாக இருக்கின்றன என்றும் மேலே 01 மற்றும் 08 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் நான் தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் 2018..........மாதம் ............ ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

-----------------------------------------------
திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும்
இறப்பர் முத்திரை.

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர்:
பதவி :
முகவரி :
திகதி :

5-329

---

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவில் சுருக்கெழுத்தாளர்/ தட்டெழுத்தாளர் (திணைக்கள) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

Open Competitive Examination for Recruitment to Posts of Stenographer and Typist (Departmental) of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2018

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் சுருக்கெழுத்தாளர்/ தட்டெழுத்தாளர் (திணைக்கள) பதவிகளில் நிலவும் 32 (முப்பத்திரெண்டு) வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்களை தெரிவு செய்வதற்கு நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்பில்

நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2018.06.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு " எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தட்டெழுத்தாளர் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மூலம்" அல்லது "சுருக்கெழுத்தாளர் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மூலம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2018.06.11 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக பரிசீலிக்கப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

**01. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- எழுத்துமூல மற்றும் தொழிற்துறைப் பரீட்சையின் பின்னர் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய, திறமை ஒழுங்கு முறைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) – 04
சுருக்கெழுத்தாளர் (தமிழ்) – 02
சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) – 04

தட்டெழுத்தாளர் (சிங்களம்) – 14
தட்டெழுத்தாளர் (தமிழ்) – 04
தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) – 04

1.1 இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தனக்கு ஏற்புடைய ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும், உரிய வினாப்பத்திரத்திற்கு அந்த மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**02. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**:-

இப்பதவி நிரந்தமானது; ஓய்வூதிய உரித்துடையது. மேலும், விதவைகள், அனாதைகள்/ தபுதாரர், அனாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.)

இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுவர். அந்த மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

அவ்வாறே தரம் II க்கு பதவி உயர்வு பெற்று 03 வருடங்கள் கழிவதற்கு முன்னர் இரண்டாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையிலும், தரம் I க்கு பதவி உயர்வு பெற்று 05 வருடங்கள் கழிவதற்கு முன்னர் மூன்றாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

பொது நிர்வாக சுற்றறிக்கை இல 7/2007 மற்றும் 01/2014 அதற்கு இடைதேர்வான சுற்றறிக்கைகளுக்கு அமைய, ஐந்து (05) வருடத்திற்குள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஆணைக்குழுவின் ஏனைய கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருப அறிவுத்துரைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டிருக்கும்.

**03. சம்பள அளவுத்திட்டம்**:-

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்: ரூபா 27,140-10x300-11 x 350-10 x 495-10 x 660 - ரூபா 45,540 (சம்பள குறியீட்டு இலக்கம் - MN 1- 2016)

இந்த சம்பள அளவுத்திட்டம் 2020.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். 2018.01.01 ஆந் திகதிக்கு அடிப்படைச் சம்பளம் ரூ.21,532 மற்றும் ரூ.4,306 ஒப்பீட்டுக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**04. தேவையான தகைமைகள்:-**

***கல்வி/தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம்:-***

- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்கு திறமை சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க. பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

- கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்தில் (பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

- பதவியின் பணிக்கடமைகளுக்கு ஏற்புடைய மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து /தட்டெழுத்து தொடர்பான ஆறு (06) மாதத்திற்கு குறையாத பாடநெறி ஒன்றை/கணினிப் பாடநெறி ஒன்றை வெற்றிகரமாக பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் பதவிக்கு ஏற்புடைய தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பாடத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

- பதவிக்கு ஏற்புடைய துறையில் ஆறு (06) மாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்

***வயதெல்லை:-*** 2018.06.11 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(அதற்கிணங்க, 2000.06.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1988.06.11 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க தகுதிபெறுவர்.)

***உடற் தகைமைகள்:-***

இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***வேறு தகைமைகள்:-***

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

- சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவற்கு தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

- இந்தப் பதவிக்கு தகைமைப் பெறுபவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் சேவைக்கு பொருத்தமானவரா என்பதை தேடிப்பார்ப்பதற்கு பாதுகாப்பு தடைநீக்க அறிக்கை கோரப்படும் .

**05. ஆட்சேர்ப்பு முறை :**

5.1 ***எழுத்துமூலப் பரீட்சை:*** பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| பாடங்கள் | பாடத்திட்டம் | காலம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைய வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| பொது அறிவு மற்றும் கட்டுரை எழுதுதல் | • உள்நாட்டு மற்றும் சர்வதேச துறைகளில் நடப்பு நிகழ்வுகள் பற்றிய பொது அறிவைப் பரீசித்தல். (பல்தேர்வு வினாக்கள் 60)<br>• நடப்பு முக்கியத்துவமுள்ள தலைப்புக்களில் தெரிவு செய்யப்பட்ட தலைப்பு ஒன்றின் கீழ் கட்டுரை ஒன்றை எழுதுதல். (விசேட கருத்துக்களை முன்வைத்தல், மொழி யாற்றல், சரியான இலக்கணப் பயன்பாடு மற்றும் எழுத் திலக்கணம் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படும்) | 01 ஒரு மணித்தியாலம்<br>01 ஒரு மணித்தியாலம் | 100 | 40% |

5.2 ***தொழிற் தேர்வு:*** பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| பாடங்கள் | பாடத்திட்டம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைய வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| சுருக்கெழுத்து மற்றும் கணினி தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம்) (சுருக்கெழுத்து விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்) | 05 நிமிடங்களுக்குள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தியொன்றை நிமிடமொன்றுக்கு 80 சொற்கள் வேகத்தில் சுருக்க குறிப்பெடுத்து அந்த குறிப்புக்களை ஒரு நிமிடத்திற்கு 07 சொற்கள் வேகத்தில் கணினி தட்டச்சு செய்தல். | 100 | 40% |
| கணினி தட்டெழுத்து (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) (தட்டெழுத்து விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்) | 05 நிமிடங்களுக்குள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தியொன்றை நிமிட மொன்றுக்கு 80 சொற்கள் வேகத்தில் கணினி தட்டச்சு செய்தல். | 100 | 40% |

5.3 எழுத்துமூலப் பரீட்சையில் 40% க்கு குறையாமல் பெறுபவர்கள் தொழிற் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

5.4 ***பொதுவான நேர்முகப் பரீட்சை .-*** இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் அதற்கு ஏற்புடையதாக பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றியும் உடற் தகைமையும் பரிசோதிக்கப்படும்.

- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கு அமைய தொழிற் தகைமையில் சித்தியடைந்தவர்களில் அந்தப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு அமைய மற்றும் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

06. விண்ணப்பப்படிவத்தை செ.மீ. 22-29 அமைய ஏ4 அளவிலான காகிதத்தில் 01 தொடக்கம் 07 வரையிலான தகவல்களை முதல் பக்கத்தில் அமையுமாறு விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தம்வசம் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவும். அத்தோடு பூரணப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை கருத்திற்கொள்க.

6.1 ***பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :-***

பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

எழுத்துமூல பரீட்சையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின் போது அல்லது வினவப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வரும் ஆவணங்களை தேவையான வகையில் சமர்ப்பிப்பதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

I கல்விச் சான்றிதழ்கள்;

II பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;

III தேசிய ஆளடையாள அட்டை;

IV அனுபவம் பற்றிய சான்றிதழ்;

V நடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒன்று பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு கிராம அலுவலரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்).

**கவனிக்க:-**

(அ) விண்ணப்பிக்கும் பதவி/பதவிகளை விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் கல்வி மற்றும் தொழிற் தகைமைகளுக்கு ஏற்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(இ) ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது.

**07. பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 750/- ஆகும். இந்த தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 க்கு வரவு வைத்து இலங்கையின் எந்தவொரு தபால் நிலையம்/உப தபால் நிலையத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்கு வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் கழன்றுவிடாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானது.) எத்தகைய காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதோடு பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**08. பரீட்சைக்கு தோற்றுதல்:**

8.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்க முடிவின் பிரகாரம் அறிவித்தலிலுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட உடன் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்களுக்கு பின்னர் தமது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள படி அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவில் உசாவுதல் வேண்டும். அவ்வாறு உசாவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியிலுள்ளவரொருவரெனின் அந்தத் தகவல்களுடன் தொலை நகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கம் ஒன்றுடன் கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் உள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாகும். அவ்வாறு உசாவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்த தம்வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுப் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்த பதிவுத் தபால் சிட்டை என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனமளிக்கும்.

விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தை தான் பணியாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வூதிய உத்தியோகத்தர்/தனது பிரிவின் கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் ரூபா 3,34,452 அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரையொன்றின் பிரதம பிக்கு அல்லது தலைமைப் பிக்கு அல்லது ஏனைய சமயப் பெரியார் ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு தோற்றும் ஆரம்ப சந்தர்ப்பத்தில் பரீட்சை நிலைய அதிபருக்கு தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

8.2 எழுத்துமூல மற்றும் தொழிற் தேர்வில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு அமைய தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளின் பேறுபேற்று அட்டவணை "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல்

பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு" வழங்கப்படும். எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் அஞ்சல் மூலம் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www. results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

8.3 விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

8.4 பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர். அந்த சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கும் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.

09. அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், சேவைப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் அவற்றுக்கு செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் என்பன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது ஒரு பகுதியை நிரப்புதல் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் பதப்பிரயோகங்களுக்கு மத்தியில் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

(சனாதிபதி சட்டத்தரணி) சரத் ஜயமான்ன,
பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு
செய்வதற்கான ஆணைக்குழு,
இல. 36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2018, யூலை 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் சுருக்கெழுத்தாளர் / தட்டெழுத்தாளர் (திணைக்கள) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

Open Competitive Examination for Recruitment to Posts of Stenographer and Typist (Departmental) of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2018

விண்ணப்பிக்கும் பதவிகள்/பதவி

| | |
|---|---|
| 1- சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) | |
| 2- சுருக்கெழுத்தாளர் (தமிழ்) | |
| 3- சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) | |
| 4- தட்டெழுத்தாளர் (சிங்களம்) | |
| 5- தட்டெழுத்தாளர் (தமிழ்) | |
| 6- தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) | |

எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி

2- சிங்களம் ☐

3- தமிழ் ☐

4- ஆங்கிலம் ☐

01. இறுதியில் வரும் பெயரை ஆரம்பத்தில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதா:- NIMAL A. B. C. D.): ......................................................................................................................

02. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில்) : ..................................................

03. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ........................................................................................

04. (i) நிரந்தர முகவரி ஆங்கில பெரிய எழுத்துக்களில் (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சல் செய்யப்படும்.) :
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

(ii) அலுவலக முகவரி (அரசாங்க சேவையில் உள்ளவர் எனின்) : ......................................................................
.......................................................................................................................................................

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. பால் நிலை : ஆண் - 0
பெண் -1 ☐
(உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக.)

07. இனம்: (சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, வேறு-5) ☐
(உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக.)

08. பிறந்த திகதி:-
வருடம் : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

2018.06.11 ஆந் திகதிக்கு வயது :-

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

09. தொலைபேசி இல.:- கையடக்க : ☐☐☐☐☐☐☐☐☐☐
நிலையான: ☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகள்:

க. பொ. த. (சா.தரம்)

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உயர் தரம்)

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

11. பதவிக்குரிய பாடநெறி:-

நிறுவனம்: ..........................

பயிற்சி சான்றிதழ்/டிப்ளோமா சான்றிதழ் பற்றிய விபரம் : ..........

தொழிற் தகைமைகள்:-

2018.06.11 ஆந் திகதிக்கு தொழில் அனுபவம்:

வருடங்கள்:............... மாதங்கள்:............... நாட்கள் :..............

வேறு தகைமைகள்:-

1. .............

2. .............

3. .............

12. அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது பதவி விலகிய ஒருவரா?:-

ஆம்/இல்லை

13. ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவரா? : ஆம்/இல்லை :-

பதில் ஆம் எனில் விபரங்களைத் தருக.: ..................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள்:-

(i) பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய அலுவலகம்:.................

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி:.................

(iii) செலுத்திய தொகை:.................

பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளது.)

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் எந்தவித நஷ்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ..........................

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

.......................... வசிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் 2018 .......................... மாதம் .......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை

இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அந்தப் பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................,
கையொப்பம்

பெயர் மற்றும் பதவிப் பெயர் :.........................
முகவரி: .........................
பதவி முத்திரை: .........................
திகதி: .........................

**குறிப்பு** - தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களத் தலைவர் மூலம் அல்லது அவருக்கு பதிலாக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி அரசாங்க உத்தியோகத்தர் எனின்.-

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :-**

திரு./திருமதி/செல்வி ......................... தற்போது இந்த திணைக்களத்தில் கட்மை புரிகின்றார் என்றும் அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இந்த திணைக்களத்தில் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

.........................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர்: .........................
பதவி: .........................
திணைக்களம்: .........................
திகதி: .........................

05 - 325

---

## இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2018

1.0 இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 2 தரம் II இலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்போட்டிப் பரீட்சை 2018, ஓகத்து மாதம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படும்.

2.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 2 இன் தரம் II இலுள்ள பதவிகளில் நியமிக்கப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடத்தப்படும்.

3.0 இதன் மூலம் நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 44 ஆகும். நியமனம் பயன்வலுப் பெறும் தினம் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களில் ஏதேனும் ஒரு தொகையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

4.0 **சம்பளம்.**- 2016.02.25 ஆந் திகதிய நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 (MN-06-2016) இற்கமைய இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 2-II, 2-I ஆம் தரங்களுக்கான மாதாந்த சம்பளத் திட்டம் ரூபா 36,585-10×660-11×755-15×930 - ரூபா 65,440 ஆகும்.

**குறிப்பு**: அச் சம்பளம் தங்களுக்கு 2020.01.01 ஆந் திகதியில் இருந்தே கிடைக்கப்பெறும் . எனினும் மேற்படி சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.

5.0 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது.

6.0 ***தகைமைகள்***.- இலங்கை தகவல்,தொடர்பாடல் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு நியமிப்பது தொடர்பாக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் ஏற்புடையதாகும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) விணணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(இ) ***தேகாரோக்கியம்:*** அனைத்து விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல், உள ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ***அனுபவம்:***

(i) இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் I அலுவலராக இருத்தல் மற்றும் உடன்முன்னரான 5 ஆண்டுகால முனைப்புடனானதும், திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) வகுப்பு 3 தரம் II அலுவலராக இருத்தல் மற்றும் உடன்முன்னரான 05 ஆண்டுகால முனைப்புடனானதும், திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

(iii) இவ்வறிவித்தலின் 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(உ) மேற்படி தகைமைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அலுவலர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6.1 ***கல்வித் தகைமைகள்:***

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல் /தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(2) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல் / தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். (இதன்போது முழுமையான பட்டமானது ஆகக் குறைந்தது 1/3 பகுதி கணினியியல்/தகவல் தொழில்நுட்பம் தொடர்பானதாக அமைதல் வேண்டும்.)

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல் / தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா பெற்றிருத்தல்.

அல்லது

(3) (1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல் /தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா பெற்றிருத்தல்.

அல்லது

(4) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் தகைமை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை (NVQ) ஏழு (07) அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான (NVQ) சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் உரிய தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

7.0 **பரீட்சை நடைமுறைகள் மற்றும் பாடவிதானம்**:-

பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். இப்பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்காக பெறவேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (1) | உளச்சார்பு | 1 மணி | 100 | 40 |
| (2) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடய ஆய்வு | 2 மணி | 100 | 40 |

1. ***உளச்சார்புப் பரீட்சை:***

இவ்வினாப்பத்திரம், பரீட்சார்த்திகளின் எண்கணித ஆற்றல் , தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிக்கக் கூடிய வினாக்களைக் கொண்டதாக அமையும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களை கொண்டுள்ளதுடன் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

2. ***தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப விடய ஆய்வு:***

அரசாங்க சேவையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் ஏற்படக்கூடிய ஒரு பிரச்சினை அல்லது பல பிரச்சினைகள் சம்பந்தமாக கட்டமைக்கப்பட்ட நிகழ்வு/ நிகழ்வுகள் பரீட்சார்திக்கு முன்வைக்கப்பட்டு பரீட்சார்த்தியின் படைப்பாற்றலுடன் கூடிய சிந்தனா சக்தி மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய திறன், தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்குரிய அரசாங்க சேவையின் பரிச்சயங்கள் ஆகியனவற்றை அளவீடு செய்வதே இதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. கட்டமைக்கப்பட்ட மாதிரியான வினாக்கள் மற்றும் கட்டுரைகளைக் கொண்டதாக இவ்வினாப்பத்திரம் அமைந்துள்ளது. அத்துடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**:

கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% யாவது பெற வேண்டியுள்ளதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50 % யாவது பெறுதல் வேண்டும். அனைத்து எழுத்துமூல விடைத்தாளிலும் தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப்பிழை தொடர்பான பிழைகள் சம்பந்தமாக புள்ளிகள் குறைக்கப்படும். பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறை கண்டிப்பாக பின்பற்றப்பட்டு, போட்டிப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

8.0 **பிழையான தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பப்படிவங்களை நிரப்புகின்ற போது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து, அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய

முடியும். விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

9.0 **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இத்தொகையினை விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் வருமானத் தலைப்பின் கீழ் எந்தவொரு அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்த முடியும். அது தொடர்பாக விண்ணப்பதாரியிற்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு அதன் ஓரத்தில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது அவசியமாகும்) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10.0 (i) விண்ணப்பப்படிவங்கள் ஏ4 (21 x 29 செ.மீ) ( சதாதாரண ஹாப் சீட்) அளவுத் தாளில்,

(அ) இலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்

(ஆ) இலக்கம் 04 முதல் அடுத்துவரும் பந்திகள் ஏனைய பக்கங்களிலும் அமையக் கூடியவாறு கடதாசியின் இருபக்கங்களையும் பயன்படுத்தி, விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன், விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே விண்ணப்பம் நிரப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரிப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிராத, சரியான முறையில் நிரப்பப்படாது குறைபாடுகள் கொண்டதாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்பாது விடுவதனால் ஏற்படும் பின்விளைவுகளை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

11.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவது குறித்த விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஆதாரமாக அமையமாட்டாது. விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதை சோதிக்கின்ற போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரியவருமிடத்து அப்பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

11.1 இவ் அறிவித்தலின் 7.0 பந்தி மற்றும் குறிப்புக்கு அமைய தகைமையுடைய பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைக்கேற்ப வெளியிடப்பட்ட பெறுபேற்று அட்டவணையொன்று இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் அதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்டமுறையில் அனுப்பி வைக்கப்படும் அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.result.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

12.0 விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2018 " என்று குறிப்பிடுதல் வேண்டும்.

13.0 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் நிலவிய விண்ணப்பதாரிகளின் பதவிகள் மற்றும் சேவை நிலையம், பரீட்சை சம்பந்தமான சகல விடயங்கள் தொடர்பாகவும் ஏற்புடையதாவதுடன், விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் நிகழும் மாற்றங்களேதும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

14.0 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, யூன் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்:-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

15.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களில் பின்னரும் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் உறுதிப்படுத்தப்பட்ட படிமப் பிரதிகளையும் பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர் , விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியில் எனில் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் (ஃபக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை தம்வசம் வைத்துக் கொண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு கோரும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் வேண்டப்படும் ஏதேனும் தகவலொன்றினை உறுதிப்படுத்துவது தொடர்பாக தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி / பரீட்சைக் கட்டணம் ஏற்புடையதாயின் அது குறித்த பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை பதிவுத்தபாலிலிட்ட பற்றுச்சீட்டு ஆகியனவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

16.0 பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

17.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் அனுமதியட்டையை வைத்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கூடியவாறு திணைக்களத் தலைவர்களினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணங்கள் வழங்கப்பட மாட்டாது.

18.0 விண்ணப்பதாரியொருவர் பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்படுவது குறித்த விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஆதாரமாக அமைய மாட்டாது. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்குப் பரீட்சார்த்திகள் கடமைப்பட்டுள்ளனர். அவ்வொழுங்கு விதிகளை மீறுமிடத்து, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டியேற்படும்.

19.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத் தினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கான பொது ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகக் கடமைப்பட்டுள்ளனர்.

20.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழி அறிவித்தலே வலுவானதாக அமையும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2018, ஏப்பிறல்27.

மாதிரிவிண்ணப்பப்படிவம்

**இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2018**

Limited Competitive Examination for Recruitment to Class 2 - Grade II of Sri Lanka Information & Communication Technology Service - 2018

( அலுவலகப் பயன்பாட்டிற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
( உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

1.0

1.1 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :--------
உ-ம் GUNAWARDHNA H.M.S.K

1.2 முழுப்பெயர் ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் : -----------------------------------------------------------

உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA

1.3 முழுப்பெயர் ( சிங்களத்தில்/தமிழில்) : --------------------------------------------------------------------
--------------------------------------------------------------------

2.0 சேவை நிலையம் மற்றும் முகவரி :-

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்). -----------------------------------------------------.

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ( தமிழில் /சிங்களத்தில்) .---------------------------------------------------------------.

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி.-----------------------------------------------------.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் )

3.0

3.1 பால் : ஆண்- 0 பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி:-
வருடம்: மாதம்: திகதி:

3.3 தேசிய ஆளடையாள அட்டை இல. :

3.4 கையடக்கத் தொலைபேசி இலக்கம்.-

4.0 சேவை விபரம்:-

4.1 தாங்கள் தற்போது பணியாற்றும் நிறுவனத்தின் பெயர் : ---------------------------------------------------

4.2 அது உரித்தாகும் அமைச்சு அல்லது திணைக்களம் : ---------------------------------------------------

4.3 தற்போது வகிக்கும் பதவியின் பதவிப் பெயர் : ---------------------------------------------------

4.4 தற்போது வகிக்கும் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ----------------------------------------------------

4.5 தற்போதைய பதவி நிரந்தரமானதா? தற்காலிகமானதா?: --------------------------------------------------

4.6 தற்போதைய பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா? : ---------------------------------------------

4.7 தற்போதைய பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்டமை குறித்து வழங்கப்பட்ட கடிதத்தின் தொடர் இலக்கமும் திகதியும்: ------------------------------------------------------------------------------------------------

4.8 (அ) தற்போதைய சம்பளம்:

------------------------------------------------------------------------------------------------

(ஆ) சம்பள அளவுத்திட்டம் (2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 அமைய சம்பளக் குறியீடு ---------------------------------------------------------------------------------

4.9 இணைந்த சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலராயின் உள்ளீர்க்கப்பட்ட திகதி:

------------------------------------------------------------------------------------------------

4.10 தற்போதைய பதவி ஓய்வூதிய உரித்துடையதா என்பது பற்றி:

------------------------------------------------------------------------------------------------

4.11 விண்ணப்பம் கோரப்படும் இறுதித்தினத்தன்று தற்போதைய பதவியின் சேவைக்காலம்:

------------------------------------------------------------------------------------------------

5.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள்:

1. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகம் :---------------------------

2. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----------------------------

3. செலுத்திய தொகை :----------------------------

| |
|---|
| பற்றுச் சீட்டினைக் கழறாதவாறு இவ்விடத்தில் ஒட்டுக.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனப்படலாம்). |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் செய்யப்பட்டுள்ள இவ் வெளிப்படுத்துகை பொய்யானது என்று நிரூபிக்கப்படுமிடத்து, நியமனம் வழங்கப்பட முன்னராயின் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும் நியமனம் கிடைத்ததன் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சையை நடத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

திகதி: ..................

.................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(கையொப்பம் உறுதிப்படுத்துபவரின்
முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்)

**(குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்காக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரின் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டும்.)

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி.................................. என்பவர் இத் திணைக்களத்தில் நிரந்தர மற்றும் ஓய்வூதியமுடைய பதவியொன்றில் சேவையாற்றுகின்றார் என்றும் இப்பரீட்சை அறிவித்தலின்படி இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளார் என்றும் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியுமென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ....................... ...........................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
(உத்தியோகபூர்வ முத்திரையிடவும்).

திணைக்களத் தலைவரின் பெயர்:-----.
பதவி:-----.
முகவரி:-----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

1. இவ்விண்ணப்பதாரர் ஆகிய திரு./திருமதி/செல்வி ------------------------------------------------------------------ --- இத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார் எனவும்,
2. அவ் அலுவலர் அரச சேவைக்குரிய இணைந்த சேவையில் நிரந்தர பதவியை வகிப்பவர் எனவும்,
3. அவ் அலுவலர் நிரந்தரப் பதவிக்கு ---------------------------------- ஆந் திகதியளவில் சேவைக்கு நிரந்தரமாக்கப்பட்டார் எனவும்,
4. நிரந்தரப் பதவிக்கான சேவையில் நிரந்தரமாக்கப்பட்டமை குறித்த கடிதம் வழங்கப்பட்டுள்ளது எனவும்,
5. அவ் அலுவலர் ------------------------------------ ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகள் முனைப்புடனான சேவைக்காலத்தை பூரணப்படுத்தியுள்ளார் எனவும், (அறிவித்தலின் 6 (இ) மூலம் எதிர்ப்பார்க்கப்பட்டவாறு)
6. ---------------------------- ஆந் திகதியளவில் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகால திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும், (அறிவித்தலின் 6 (ஈ) மூலம் எதிர்ப்பார்க்கப்பட்டவாறு)
7. உடன்முன்னரான 05 ஆண்டுகால சம்பள ஆண்டேற்றங்களை உரிய தினத்தில் ஈட்டியுள்ளார் எனவும்,
8. இப் பரீட்சை தொடர்பாக விண்ணப்பிப்பதற்குரிய உரிய பதவியின் குறித்த வகுப்பு மற்றும் தரத்தில் உள்ளார் எனவும்,
9. இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனம் தொடர்பாக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவ் அலுவலர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படும் எனவும்,
10. பரீட்சைக் கட்டணமாக ரூபா 500.00 செலுத்தி, பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும்,
11. அவ் அலுவலரது விண்ணப்பத்தில் காண்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்திலுள்ள ஆவணங்களுடன் சரி பார்க்கப்பட்டுள்ளமை மற்றும் இப்பரீட்சைக்குரிய பரீட்சை அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவ் அலுவலர் தகுதியானவர் எனவும், நான் சான்றுரைக்கிறேன்.

..........................
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----------------------------------
பதவிப் பெயர் :---------------------------
முகவரி :---------------------------------
திகதி:------------------------------------

**கவனிக்கவும் .-**

(1) திணைக்களத் தலைவர் அல்லது அவருக்காக கையொப்பமிடுவதற்கு உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட பதவிநிலை அலுவலரினால் மாத்திரம் இச் சான்றுரையில் கையொப்பமிடல் வேண்டும். இச் சான்றுரையில் அடங்கியுள்ள விடயங்கள் எல்லா வகையிலும் சரியானதென சான்றுபடுத்தும் அலுவலர் திருப்தியுறல் வேண்டும்.

(2) தகைமை தொடர்பாக அவசியப்படுத்தும் அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திராத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களது விண்ணப்பங்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்காதிருத்தல் வேண்டும்.

05 - 354

---

## இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2018

1.0 இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 2 தரம் II இலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்போட்டிப் பரீட்சை 2018, ஓகத்து மாதம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

2.0 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 2 இன் தரம் II இலுள்ள பதவிகளில் நியமிக்கப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3.0 இதன் மூலம் நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 102 ஆகும். நியமனம் பயன்வலுப் பெறும் தினம் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களில் ஏதேனும் ஒரு தொகையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

4.0 நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 3 வீதம் வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறுகின்ற வலது குறைந்த நபர்களில் கூடிய புள்ளிமட்டத்தை அடைகின்ற 3 வீதமானவர்கள் மட்டும் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் குறைந்த பட்சம் 50 வீதமாவது ஆதல் வேண்டும். நியமனமொன்றுக்காக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் விசேட மருத்துவ பரிசோதனை குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன் தனது வலது குறைந்த நிலைமையும் சம்பந்தப்பட்ட பதவியில் கடமையாற்றுவதற்கு அது தடையாக இராது என்பதையும் விசேட மருத்துவ அறிக்கை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

5.0 **சம்பளம்**.- 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 (MN-06-2016) இற்கமைய இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 2-II, 2-I ஆம் தரங்களுக்கான மாதாந்த சம்பளத் திட்டம் ரூபா 36,585-10×660-11×755-15×930 - ரூபா 65,440 ஆகும்.

**குறிப்பு**: அச் சம்பளம் தங்களுக்கு 2020.01.01 ஆந் திகதியில் இருந்தே கிடைக்கப்பெறும் . எனினும் மேற்படி சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.

6.0 இப்பதவி நிரந்தரமானது. இப்பரீட்சையில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அலுவலர் கட்டுப்படல் வேண்டும்.

7.0 **தகைமைகள்**.- இலங்கை தகவல்,தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 35 வயதிற்குக் மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 1997.06.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1983.06.11 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருப்பவர்கள் மாத்திரம் இது தொடர்பாக விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.);

**குறிப்பு**: அரச சேவையில் நிரந்தர பதவியில் சேவையிலிருக்கும் அலுவலர்கள் இப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கும் போது இத்தடவை மாத்திரம் ஆகக் கூடிய வயதெல்லை 45 ஆகும். அதன்மூலம் அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் 1997.06.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரோ 1973.06.11 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருப்பவர்கள் மாத்திரம் இது தொடர்பாக விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.

(இ) நன்நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்;

(ஈ) சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமைபுரிவதற்கும் போதுமான சிறந்த உள, தேகாரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(உ) **கல்வித் தகைமைகள்:**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல் /தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(2) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல் / தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல். (இதன்போது முழுமையான பட்டமானது ஆகக் குறைந்தது 1/3 பகுதி கணினியியல்/தகவல் தொழில்நுட்பம் தொடர்பானதாக அமைதல் வேண்டும்.)

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல் / தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா பெற்றிருத்தல்.

அல்லது

(3) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து கணினியியல் /தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(4) (i) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் தகைமை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை (NVQ) ஏழு (07)/ அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான (NVQ) சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

(ii) குறித்த துறையில் இரண்டு (02) ஆண்டுகால தொழிற்தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

(i) இங்கு 7.0 (உ) 4(ii) மூலம் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் திறமைகளை சான்றுப்படுத்தும் பொருட்டு குறித்த சான்றிதழ்களின் மூலம் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

தனியார் துறைசார் தொழிலொன்றில் ஈடுபட்டுள்ளபோது பெற்ற தொழிற்சார் அனுபவம், நிறுவனத்தின் வியாபார பதிவு இலக்கம், விண்ணப்பதாரியின் ஊழியர் சேமலாப நிதிய இலக்கம் உள்ளடங்கிய கடிதம் மற்றும் குறித்த நியமனக் கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
அரச துறைசார் தொழிலொன்றில் ஈடுபட்டுள்ள போது தொழில்சார் அனுபவம் பெற்றிருப்பின் அது குறித்து திணைக்கள தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட கடிதம் மற்றும் கடமைப்பட்டியல் மூலம் அது பற்றி உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் உரிய தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

8.0 **பரீட்சை நடைமுறைகள் மற்றும் பாடவிதானம்**:

8.1 பரீட்சையானது மூன்று வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். இப்பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

8.2 பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன:-

| | | நேரம் | புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (1) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 2 மணி | 100 | 40 |
| (2) | உளச்சார்புப் பரீட்சை | 1 மணி | 100 | 40 |
| (3) | பொது அறிவு | 1 மணி | 100 | 40 |

8.3 ***(1) தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்:-***

பரீட்சார்த்திகளின் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கோட்பாடு பற்றிய அறிவு கணினி வடிவமைப்பு மற்றும் இயங்கு தளங்கள்/ மென்பொருட்கள்/ வன்பொருட்கள் தொடர்பான அறிவு, e - அரசாங்கம் (e-gov) எண்ணக்கருவினை மிகவும் பயனுறுதி வாய்ந்த முறையில் செயற்பாட்டில் கொண்டுவருவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு, தகவல்கள் அமைப்புப் பகுப்பாய்வு, ஆக்கங்கள் பரிசோதனை செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் (System Analysis, Design, Testing, Implementation and Maintenance) தொடர்பான அறிவு, தரவுத்தளம் (Database), வடிவமைப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அறிவு, வன்பொருள், தரவுத் தொடர்பாடல் மற்றும் கணினி வலையமைப்பு, இணையத்தளம், இணையத்தளங்களை உருவாக்குதல் மற்றும் புதிய இணையத்தள சேவைகள், கணினி வலையமைப்பு முகாமைத்துவம் தொடர்பான அறிவு, இணைய வலையமைப்பு மற்றும் மின்னஞ்சல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்திட்ட வாழ்க்கை சுழற்சி போன்ற துறைகள் தொடர்பான அறிவு மற்றும் கண்காணிப்புத் திறனை ஆழமாகப் பரீட்சித்துப் பார்க்கும் வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும்.

***(2) உளச்சார்புப் பரீட்சை:-***

இவ்வினாப்பத்திரம், பரீட்சார்த்திகளின் எண்கணித ஆற்றல் , தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றைச் சோதிக்கக் கூடிய வினாக்களைக் கொண்டதாக அமையும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களை கொண்டுள்ளதுடன் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***(3) பொது அறிவு:-***

எண், மொழி மற்றும் உருக் கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றுக்கிடையேயான தொடர்புகளுக்குரியதாக முன்வைக்கப் படும் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்யும் திறன், தர்க்க ரீதியான புரிந்துணர்வு, வரைவிலக்கணப்படுத்தல் திறன், ஏனைய நிலைகளை ஏற்புடையதாகக் கொள்ளும் ஆற்றல், தீர்வினை எட்டுவது ஆகியன தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவு மட்டத்தை அளவீடு செய்வதே இதன் நோக்கமாகும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிக்கக் கூடிய வகையிலான வினாக்களைக் கொண்டுள்ளதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**:

கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப் பத்திரம் அமையும். இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40 வீதத்தையாவது பெற வேண்டியுள்ளதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50 வீதத்தையாவது பெறுதல் வேண்டும். அனைத்து எழுத்துமூல விடைத் தாளிலும் தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப்பிழை தொடர்பான பிழைகள் சம்பந்தமாக புள்ளிகள் குறைக்கப்படும். பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறை கண்டிப்பாக பின்பற்றப்பட்டு, போட்டிப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

*(8.4)* *நிரப்புவதற்குத் தீர்மானித்துள்ள வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்ட முறையில் அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின்* www.results.exams.gov.lk *இணைய தளத்தில் பிரசுரிக்கப்படுவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.*

***நேர்முகப் பரீட்சை:***

*எழுத்துமூலப் பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகளிடையேயிருந்து இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அந் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.*

*9.0* ***பிழையான தகவல்களுக்கான தண்டனைகள்***: *விண்ணப்பப்படிவங்களை நிரப்புகின்றபோது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து, அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.*

*10.0* ***பரீட்சைக் கட்டணம்***: *பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இத்தொகையினை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் வருமானத் தலைப்பின் கீழ் எந்தவொரு அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்த முடியும். அது தொடர்பாக விண்ணப்பதாரி வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது அவசியமாகும்) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*11.0* (i) *விண்ணப்பப்படிவங்கள் ஏ4 (21 × 29 செ.மீ) ( சாதாரண ஹாப் சீட்) அளவுத் தாளில்,*

*(அ)* *இலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்*

*(ஆ)* *இலக்கம் 04 முதல் அடுத்துவரும் பந்திகள் ஏனைய பக்கங்களிலும் அமையக் கூடியவாறு விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன், விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமே விண்ணப்பம் நிரப்பப்படுதல் வேண்டும்.*

*(இ)* *விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.*

*உரிய மாதிரிப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிராத, சரியான முறையில் நிரப்பப்படாது குறைபாடுகள் கொண்டதாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்பாது விடுவதனால் ஏற்படும் பின்விளைவுகளை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.*

*12.* *வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவது குறித்த விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஆதாரமாக அமையமாட்டாது. விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதை சோதிக்கின்ற போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரியவருமிடத்து அப்பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும்.*

13. விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2018 " என்று குறிப்பிடுதல் வேண்டும்.

14. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத் தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியொருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவராலும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வு பெற்ற அலுவலரொருவரால், பிரிவின் கிராம அலுவலரொருவரால், சமாதான நீதவான் ஒருவரினால் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணியொருவரினால், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு ஒருவரினால், ரூபா 240, 360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்தத் திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்கத்தின் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கின்ற பதவிநிலை அலுவலர் ஒருவரினால், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, தலைமைத் தேரர் அவர்கள், ஏனைய மத ஸ்தலங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த ஒருவர் ஆகிய யாரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

15. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, யூன் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்:-

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ. இல. 1503,
கொழும்பு.

16. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் உறுதிப்படுத்தப்பட்ட படிவப் பிரதிகளையும் பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர் , விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். கொழும்புக்கு வெளியில் எனில் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் (ஃபக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உங்களது கோரிக்கைக் கடிதத்தை உங்களிடம் வைத்துக் கொண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு கோரும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் வேண்டப்படும் ஏதேனும் தகவலொன்றினை உறுதிப்படுத்துவது தொடர்பாக உங்கள் வசம் வைத்துள்ள விண்ணப்பப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி/பரீட்சைக் கட்டணம் ஏற்புடையதாயின் அது குறித்த பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டு ஆகியனவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

16.1 பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தினத்திலேயே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிச்சீட்டினை சமர்ப்பித்தல் வேண்டும்.

17. பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

18. விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்படுவது குறித்த விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஆதாரமாக அமையமாட்டாது. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்குப் பரீட்சார்த்திகள் கடமைப்பட்டுள்ளனர். அவ்வொழுங்கு விதிகளை மீறுமிடத்து, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டியேற்படும்.

19. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கான பொது ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகக் கடமைப்பட்டுள்ளனர்.

20.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் அல்லது பொருந்தாமை காணப்படுமாயின் சிங்கள மொழி அறிவித்தலே வலுவானதாக அமையும்.

கே.வீ.பீ.எம்.ஜே.கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2018, ஏப்பிறல்27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2018**

Open Competitive Examination for Recruitment to Class 2 - Grade II of Sri Lanka Information & Communication Technology Service - 2018

( தரப்பட்டுள்ள கூட்டினுள் பொருத்தமான குறியீட்டை/இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடவும்)

( அலுவலகப் பயன்பாட்டிற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
( உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

* நீர் பரீட்சைக்குத் தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4.0 க்கு அமைவாக அங்கவீனர் புனர்வாழ்வு சலுகை அடிப்படையிலா?

(இப்பகுதியில் "ஆம்" என குறிப்பிடுவது அங்கவீன விண்ணப்பதாரிகள் மட்டுமேயாவதுடன் இதை நிரப்புவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 4.0 ஐ தெளிவாக வாசிக்கவும்)

ஆம் - 1
இல்லை - 2
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

1.0

1.1 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-------------
(உ-ம் : GUNAWARDHNA H.M.S.K.)

1.2 முழுப்பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : --------------------------------------------------------
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.3 முழுப்பெயர் ( சிங்களத்தில்/தமிழில்) : ----------------------------------------------------------------------
----------------------------------------------------------------

2.0

2.1 நிரந்தர முகவரி ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) .- -----.

2.2 நிரந்தர முகவரி ( சிங்களத்தில் /தமிழில்) .- -----.

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி.-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் )

3.0

3.1 பால் : ஆண்- 0 பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.2 தேசிய ஆளடையாள அட்டை இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.3 பிறந்த திகதி:
வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி (2018.06.11 ஆந் திகதியன்று வயது):-
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

3.5 கையடக்கத் தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 கல்வித் தகைமைகள்:

4.1 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருப்பின்,

(i) பல்கலைக்கழகம் : ------------------------
(ii) பட்டம் : ------------------------
(iii) பட்டம் செல்லுபடியாகும் திகதி : ------------------------
(iv) பிரதான பாடங்கள் 01.------------------------
02.------------------------
03.------------------------
04.------------------------

4.2 பட்டப்பின் பட்டம், பட்டப்பின் டிப்ளோமா பெற்றிருப்பின்,

(i) பல்கலைக்கழகம்/நிறுவனத்தின் பெயர் : ------------------------
(ii) பட்டப்பின் பட்டம்/பட்டப்பின் டிப்ளோமா பெயர் : ------------------------
(iii) பட்டப்பின் பட்டம்/பட்டப்பின் டிப்ளோமா பெயர் செல்லுபடியாகும் திகதி : ------------------------

4.3 (அ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் தகைமை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை NVQ 7/ அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான NVQ சான்றிதழ்

பெற்றிருப்பின்,

(i) பாடநெறியின் பெயர் : ------------------------
(ii) பாடநெறியைத் தொடர்ந்த நிறுவனம் : ------------------------
(iii) பாடநெறி செல்லுபடியாகும் திகதி : ------------------------
(iv) பாடநெறி கால எல்லை (மணித்தியாலம்) : ------------------------

(ஆ) தொழில்சார் அனுபவம் மற்றும் பிற தகைமைகள் :

தொழில்சார் அனுபவம்:

| | அனுபவம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் | கால எல்லை |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

(இ) பிற தகைமைகள் :-----------.

5.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள்:

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் : ----------------------------

(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ----------------------------

(iii) செலுத்திய தொகை : ----------------------------

பற்றுச் சீட்டினைக் கழறாதவாறு இவ்விடத்தில் ஒட்டுக.

6.0 எப்போதாவது ஏதாயினும் ஒரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவரா?

உரிய கூட்டினுள் "✓" அடையாளம் இடவும் (விடை "ஆம்" எனின் விபரங்களைக் குறிப்பிடவும்) ஆம் ☐ இல்லை ☐

-------------------------------------------------------------------------------------------

7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதாயினும் ஒரு பகுதியை நிரப்பாது விடுவதனால் மற்றும்/அல்லது தவறான முறையில் நிரப்புவதனால் ஏற்படக்கூடிய பாதகங்களை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும் இதிலுள்ள அனைத்துப் பகுதிகளையும் உரிய முறையில் பூர்த்தி செய்துள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இவ்வெளிப்படுத்துகை பொய்யானது என்று நிரூபிக்கப்படுமிடத்து, நியமனம் வழங்கப்பட முன்னராயின் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும் நியமனம் கிடைத்ததன் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்பதயும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

திகதி:.................. ..........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(கையொப்பம் உறுதிப்படுத்துவரின்
முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்)

8.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி...................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் என் முன்னிலையில் ...................ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார்

என்பதையும் மேலும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ........................ ............................
உறுதிப்படுத்துபவரின் கையயொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:-----.
பதவி:-----.
முகவரி:-----.
( உத்தியோபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துக)

9.0 திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (விண்ணப்பிக்கும் அரச அலுவலர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................... என்பவர் இத் திணைக்களத்தில் நிரந்தர மற்றும் ஓய்வூதியமுடைய பதவியொன்றில் சேவையாற்றுகின்றார் என்றும், இப்பரீட்சை அறிவித்தலின் படி இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளார் என்றும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியுமென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .................. ...........................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையிடவும்.)

திணைக்களத் தலைவரின் பெயர் :-------------------------------------
பதவி :-------------------------------------
முகவரி :-------------------------------------

5 - 355

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.